# சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

தாளமுத்து நடராசன் மாளிகை, நெ.1, காந்தி இர்வின் சாலை, எழும்பூர், சென்னை – 600 008.
Website : www.cmdachennai.gov.in

அறிவிக்கை எண்.1/நிருவாகம்/செ.பெ.வ.கு./பணி நியமனம் 2021 தேதி: 13/10/2021

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் காலியாக உள்ள ஓட்டுநர் பதவிக்கு இனசுழற்சி அடிப்படையில் நேரடி நியமனம் செய்யப்பட உள்ளதால், தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. **www.cmdachennai.gov.in** என்ற இணையதள முகவரி வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

| இணையதள வாயிலாக விண்ணப்பத்தினை விண்ணப்பிக்க கடைசி நாள் | 27.10.2021 |
|---|---|

| வ. எண். | பதவியின் பெயர் மற்றும் ஊதிய விகிதம் | காலிப்பணியிட எண்ணிக்கை | கல்வி மற்றும் பிற தகுதிகள் |
|---|---|---|---|
| 1. | ஓட்டுநர்<br>ரூ. 19500 – 62000<br>நிலை–8 | 25 | 1. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் 8–ஆம் வகுப்பு தேர்ச்சி.<br>2. செல்லத்தக்க நிலையிலுள்ள LMV ஓட்டுநர் உரிமம், மோட்டார் வாகன விதிகளின்படி ஒப்பளிக்க தகுதியான அதிகாரி அளித்துள்ள உரிமம் பெற்றிருக்க வேண்டும்.<br>3. குறைந்தது 2 வருடம் வாகனம் ஓட்டிய முன்அனுபவ சான்று பெற்றிருக்க வேண்டும்.<br>4. முதலுதவி பயிற்சி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>5. உடல் தகுதிக்கான மருத்துவச் சான்றிதழ். |

**குறிப்பு:**

விண்ணப்பதாரர்கள் இணையதள விண்ணப்பத்தினை பூர்த்தி செய்வதற்கு முன்பாக இணையதள முகவரியில் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தலில் குறிப்பிட்டுள்ளவற்றில் அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளார்களா என்றும் அவர்களுக்கு தகுதி குறைவு இல்லை என்றும் உறுதியாக அறிந்த பின்னர் கவனமுடன் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்ய வேண்டும்.

விண்ணப்பதாரர் பின் நாட்களில் தகுதிகள் அற்றவர் என கண்டறியும் பட்சத்தில் தகுதி நீக்கம் செய்யப்படுவர்.

சென்னையில் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**<u>இன சுழற்சி விபரம்</u>**

SC(A)(P)(W)(DW)–1, BC(Other than Backward class Muslims)(P)–2, GT(NP)(W)(DW)–1, SC(P)–1, MBC&DNC(NP)(W)(DW)–1, BC(Other than Backward class Muslims)(NP)(W)(DW)–1,

BC(Other than Backward class Muslims)(NP)-3, GT(NP)–2, SC(NP)(W)(DW)–1, MBC&DNC(NP)–2, BC (Muslims)(P)–1, SC(NP)–2, BC(Other than Backward class Muslims)(NP) (W) (PSTM)–1, GT(NP)(W)(PSTM)–1, GT(P)–1, MBC&DNC(NP)(W)(PSTM)–1, SC(NP)(W)(PSTM)–1, GT(NP)(Ortho)–1, MBC & DNC(P)–1.

**Note:**

GT-(General Turn), (P)-(Priority), (NP)-(Non Priority), SC-(Scheduled Castes), (A)-Arunthathiyar on Preferential Basis, (W)-Women, (DW)-Destitute Widow,

BC-(Backward Classes (Other than BC Muslims)), BC(M)-(Backward Class Muslims), MBC-(Most Backward Classes & Denotified Communities), (PSTM)- Person studied in Tamil Medium.

**வயது வரம்பு: (01.07.2021 அன்று)**

ஓட்டுநர் பதவிக்கான விண்ணப்பதாரரின் குறைந்தபட்ச வயது 18 ஆகும். ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்) மற்றும் பழங்குடியினர் வகுப்பினர்களுக்கு அதிகபட்ச வயது 37 ஆகும். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) வகுப்பினர்களுக்கு அதிகபட்ச வயது 34 ஆகும். இதர வகுப்பினருக்கு அதிகபட்ச வயது 32 ஆகும்.

முன்னாள் இராணுவத்தினர், ஆதரவற்ற விதவைகள் மற்றும் மாற்று திறனாளிகளுக்கு வயது வரம்பு சலுகைகள் நடைமுறையில் உள்ள அரசு விதிமுறைகளின்படி செயல்படுத்தப்படும்.

**உறுப்பினர் செயலர்**

செ.ம.தொ.இ./ 909 /வரைகலை/2021 **" சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"**